1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 254 /2023

2025 வது ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12–ம் நாள் வா.சா.2 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.உமா(மண்டல துணை வட்டாட்சியர், திருநெல்வேலி) | வட்டம் | |
| க.பெ | திரு.சரவணன் | கிராமம் | |
| வயது | 57 | மதம் | |

12.08.2025 முதல் விசாரணை

நான் நீதிமன்ற அழைப்பாணை பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு சாட்சியம் அளிக்க வட்டாட்சியர் அதிகாரம் அளித்துள்ளார். 12.02.1993 தேதியிட்ட 14 ன் கீழ் இடஒதுக்கீடு செய்யப்பட்ட உத்தரவு அசல் ஆவணத்தை கொண்டு வந்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் மேற்படி உத்தரவின் நகல் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உத்தரவின் படி 14 ன் கீழ் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவு நிபந்தனைகள் பின்பற்றாதவர்களுக்கு பட்டா ரத்து செய்யப்பட்டதாக கோப்புகள் எதுவும் இல்லை. மேற்படி 12.02.1993 தேதியிட்ட உத்தரவில் 22 வது நிலத்துண்டானது திரு.மிக்கேல் அந்தோணி தகப்பனார் பெயர் அடைக்கலம் என்பவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பின்பு 31.01.1996 அன்று அந்தோணி அம்மாள் மற்றும் 23 நபர்களுக்கு மேற்படி புலஎண்ணில் மற்றோரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நத்தம் புல எண் 43/34 ஆகும். மேற்படி இரு உத்தரவுகளிலும் புல எண் 43/34 ஆகும். இரண்டாவது உத்தரவில் 22 வது நிலத்துண்டு அந்தோணி அம்மாள் கணவர் பெயர் மிக்கேல் ராஜ் என்பவரின் பெயரில் உள்ளது. 31.01.1996 அன்று மேற்படி புல எண் 43/34 ல் பட்டா அந்தோணி அம்மாள் மற்றும் 23 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் 31.01.1996 தேதியிட்ட இரண்டாவது உத்தரவின்

நகல் ஆகும். அது சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இரண்டாவது உத்தரவு பொருத்து மேல்முறையீடு எதுவும் கிடையாது.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

சர்வே எண் 43/34 க்கு 1993 ம் வருடம் மற்றும் 1996 ம் வருடம் இரண்டு முறை நில ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு முறை நில ஒப்படைப்பு செய்யப்பட்ட போதும் அந்தோணியாகப்பன் மகன் அடைக்கலம் என்பவருக்கு எந்த ஒரு நிலத்துண்டும் ஒப்படைப்பு செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி இன்னாசி என்பவருக்கும் எந்த ஒரு நிலத்துண்டும் ஒப்படைப்பும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அடைக்கலம் மகன் ஜோசப் என்பவருக்கும் எந்த ஒரு நிலத்துண்டும் ஒப்படைப்பும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்கள் அனைவரும் நிலம் பெற்றுக் கொண்டதாக அரசாங்கத்திற்கு பணம் எதுவும் ஒப்படைப்பு செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 43/34 ன் மொத்த விஸ்திரணம் இரண்டாவது உத்தவின் படி 0.80.60 ஏர்ஸ் ஆகும். 1993 ல் உள்ள உத்தரவின் படி 45 பயனாளிகளுக்கு தலா 2 ½ சென்ட் விகிதம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்படைப்பு செய்த பின்பும் அதே புல எண்ணில் கூடுதல் நிலம் இருந்து வருகிறது என்றால் சரிதான். 1993 ம் வருடம் வழங்கப்பட்ட 45 பயனாளிகளுக்கு நில ஒப்படைப்பு ரத்து செய்யப்பட்டதாக எவ்வித ஆவணங்களும் இல்லை என்றால் சரிதான். மேற்படி புல எண் 43/34 ல் 1993 ம் வருடம் வழங்கப்பட்ட நில ஒப்படைப்பும் 1996 ம் வரும் வழங்கப்பட்ட நில ஒப்படைப்பும் தனித்தனி அளவுகளுடன் உள்ளது என்றால் சரிதான். ஷேக் மன்சூர் என்பவருக்கு இந்த ஒப்படைப்பில் உள்ள அளவுகளின் படி நிலம் எதுவும் வழங்கப்படவில்லை. இரண்டு முறை வழங்கப்பட்ட நில ஒப்படைப்பை காட்டக்கூடிய புல வரைபடம் நகல் அசல் ஆவணத்துடன் ஒப்பீட்டு சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.